# வாராந்தப் பொருளாதாரக் குறிகாட்டிகள்



## 2023 யூலை 21

புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

# வாரத்தின் முக்கிய பண்புகள்

## உண்மைத் துறை

ஆண்டிற்காண்டு அடிப்படையில், முதன்மைப் பணவீக்கத்தை அடிப்படையாகக்கொண்ட தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது 2023 மேயின் 22.1 சதவீதத்திலிருந்து 2023 யூனில் 10.8 சதவீதத்திற்கு குறைவடைந்தது. 2023 யூனில் உணவுப் பணவீக்கம் 2.5 சதவீதத்தை பதிவுசெய்த அதேவேளை உணவல்லாப் பணவீக்கம் 18.3 சதவீதத்தை பதிவுசெய்தது. மேலும், மையப் பணவீக்கத்தை அடிப்படையாகக்கொண்ட தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது 2023 மேயின் 21.6 சதவீதத்திலிருந்து 2023 யூனில் 11.3 சதவீதத்திற்கு குறைவடைந்தது.

ஆய்விற்குரிய காலப்பகுதியில் (2023.07.15 இலிருந்து 2023.07.21 வரை), மசகெண்ணெய் விலைகள் பெருமளவில் மாற்றமின்றிக் காணப்பட்டன. பெடரலின் தேய்ந்துசெல்லும் வட்டி வீத உயர்வுகளின் எதிர்பார்க்கைகளுக்கு மத்தியில் சீனாவிலிருந்து நலிவான பொருளாதாரத் தரவுகள் காணப்பட்ட போதும், கேள்விகள் பற்றி சந்தைகள் சாதகமாகவிருந்தன. ஒட்டுமொத்தமாக ஆய்விற்குரிய காலப்பகுதியில், பிறென்ட் மற்றும் மேற்கு டெக்சாஸ் இடைநிலை மசகெண்ணெய் விலை முறையே, பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 0.69இனாலும் பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 0.74இனாலும் அதிகரித்தன.

## நாணயத் துறை

2023 யூலை 21 ஆம் நாளன்று முடிவடைந்த வாரத்திற்கான வாராந்தச் சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதம் முன்னைய வாரத்துடன் ஒப்பிடுகையில் 93 அடிப்படைப் புள்ளிகளால் 17.76 சதவீதத்திற்கு குறைவடைந்தது.

மத்திய வங்கியுடன் வர்த்தக வங்கிகளால் பேணப்படும் வைப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பின் முக்கிய காரணமாக முன்னைய வாரத்துடன் ஒப்பிடுகையில் ஒதுக்குப்பணம் அதிகரித்தது.

மொத்த வெளிநின்ற சந்தைத் திரவத்தன்மையானது கடந்த வார இறுதியின் ரூ.230.587 பில்லியன் கொண்ட பற்றக்குறையொன்றுடன் ஒப்பிடுகையில் 2023 யூலை 21 அளவில் ரூ. 137.830 பில்லியன் கொண்ட பற்றாக்குறையொன்றாக காணப்பட்டது.

கடந்த வாரத்தின் சுட்டெண் பெறுமதிகளுடன் ஒப்பிடுகையில், 2023 யூலை 21 அளவில், அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் 11,106.54 புள்ளிகளுக்கு 4.83 சதவீதத்தினால் அதிகரித்ததுடன், ஸ்டான்டட் அன்ட் புவர்ஸ் இலங்கை 20 சுட்டெண் 3,231.83 புள்ளிகளுக்கு 4.03 சதவீதத்தினால் அதிகரித்தது.

## இறைத் துறை

2023 ஏப்பிறலில் முடிவடைகின்ற நான்கு மாதக் காலப்பகுதியில், அரசிறை மற்றும் கொடைகள் என்பன 2022இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ. 631.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ. 821.3 பில்லியனுக்கு அதிகரித்தன.

மொத்தச் செலவினம் மற்றும் தேறிய கடன்வழங்கல் என்பன 2022இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ. 1,155.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023 சனவரி-ஏப்பிறல் வரையான காலப்பகுதியில் ரூ. 1,645.6 பில்லியனுக்கு அதிகரித்தன.

2023 சனவரி – ஏப்பிறல் வரையான காலப்பகுதியில், ஒட்டுமொத்த வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறை 2022இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ. 524.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ. 824.3 பில்லியனுக்கு அதிகரித்தது.

2023 சனவரி – ஏப்பிறல் வரையானக் காலப்பகுதியில், உள்நாட்டு நிதியிடல் 2022இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ. 651.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ. 901.8 பில்லியனுக்கு அதிகரித்தது. 2022இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ. 127.0 பில்லியன் கொண்ட தேறிய மீள்கொடுப்பனவுடன் ஒப்பிடுகையில் 2023 சனவரி-ஏப்பிறல் வரையான காலப்பகுதியில் வெளிநாட்டு நிதியிடல் ரூ. 77.5 பில்லியன் கொண்ட தேறிய மீள்கொடுப்பனவொன்றைப் பதிவுசெய்தது.

முன்னைய வாரத்துடன் ஒப்பிடுகையில் முதலாந்தரச் சந்தை தி-உண்டியல் விளைவு வீதங்கள் முதலாந்தர தி-உண்டியல் விளைவு வீதங்கள் அதிகரித்தன. அதேவேளை, வாரகாலப்பகுதியில், தி-உண்டியல் மற்றும் தி-முறி இரண்டாந்தரச் சந்தை விளைவு வளையிகள் சிறிதளவு மேல் நோக்கிய சீராக்கமொன்றை எடுத்துக்காட்டியது.

வெளிநாட்டவர்களினால் வைத்திருக்கப்படும் தி-உண்டியல்கள் மற்றும் தி-முறிகள் என்பவற்றின் வெளிநின்ற இருப்பானது முன்னைய வாரத்துடன் ஒப்பிடுகையில் அறிக்கையிடப்படும் வார காலப்பகுதியில் ரூபா நியதிகளில் 0.19 சதவீத அதிகரிப்பொன்றை எடுத்துக்காட்டியது.

அறிக்கையிடும் வார காலப்பகுதியில் வாராந்த தி-உண்டியல் மற்றும் தி-உண்டியல் ஏலம் முறையே 1.4 தடவைகளால் மேலதிகமாக கோரப்பட்டன.

தி-உண்டியல்கள் மற்றும் தி-முறிகள் என்பவற்றின் இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களின் மொத்த அளவானது முன்னைய வாரத்துடன் ஒப்பிடுகையில் அறிக்கையிடும் வார காலப்பகுதியில் 13.69 சதவீதத்தினால் அதிகரித்தது.

## வெளிநாட்டுத் துறை

2023 யூலை 21ஆம் நாள் வரையான ஆண்டு காலப்பகுதியில், இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 11.7 சதவீதத்தினால் உயர்வடைந்தது. குறுக்கு நாணயச் செலாவணி வீத அசைவுகளைக் கருத்திற்கொள்கையில், இக்காலப்பகுதியில் இலங்கை ரூபா, 18.1 சதவீதத்தினால் யப்பானிய யென்னுக்கும் 4.4 சதவீதத்தினால் ஸ்ரேலிங் பவுணுக்கும் 6.8 சதவீதத்தினால் யூரோவிற்கும் 10.7 சதவீதத்தினால் இந்திய ரூபாய்க்கும் எதிராக உயர்வடைந்தது.

# உண்மைத் துறை

## 1.1 விலைச் சுட்டெண்கள்

| தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (தேநுவிசு) (2021=100) | 2022 | 2023 | |
|---|---|---|---|
| | யூன் | மே | யூன் |
| தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் - முதன்மை | 183.5 | 203.1 | 203.3 |
| மாதாந்த மாற்றம் சதவீதம் | 10.3 | 0.2 | 0.1 |
| ஆண்டுச் சராசரி மாற்றம் சதவீதம் | - | - | - |
| ஆண்டிற்கு ஆண்டு மாற்றம் சதவீதம் | - | 22.1 | 10.8 |
| தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் - மைய | 167.5 | 187.8 | 186.5 |
| ஆண்டுச் சராசரி மாற்றம் சதவீதம் | - | - | - |
| ஆண்டிற்கு ஆண்டு மாற்றம் சதவீதம் | - | 21.6 | 11.3 |

| கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (கொநுவிசு) (2021=100) | 2022 | 2023 | |
|---|---|---|---|
| | யூன் | மே | யூன் |
| கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் - முதன்மை | 171.7 | 192.3 | 192.3 |
| மாதாந்த மாற்றம் சதவீதம் | 11.8 | 0.0 | 0.0 |
| ஆண்டுச் சராசரி மாற்றம் சதவீதம் | - | - | - |
| ஆண்டிற்கு ஆண்டு மாற்றம் சதவீதம் | - | 25.2 | 12.0 |
| கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் - மைய | 154.7 | 171.0 | 169.9 |
| ஆண்டுச் சராசரி மாற்றம் சதவீதம் | - | - | - |
| ஆண்டிற்கு ஆண்டு மாற்றம் சதவீதம் | - | 20.3 | 9.8 |

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் - ஆண்டிற்கு ஆண்டு %




கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் - ஆண்டிற்கு ஆண்டு %




மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

## 1.2 விலைகள்

### 1.2.1 புறக்கோட்டைச் சந்தை

| உணவு வகை (ரூ./கி.கிறாம்) | சராசரி மொத்த விற்பனை விலைகள் | | | | சராசரி சில்லறை விலைகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண்டிற்கு முன் | மாதத்திற்கு முன் | வாரத்திற்கு முன் | இவ்வாரம் | ஆண்டிற்கு முன் | மாதத்திற்கு முன் | வாரத்திற்கு முன் | இவ்வாரம் |
| சம்பா | 260.00 | 198.50 | 199.00 | 193.00 | வி.கி | 230.00 | 222.00 | 210.00 |
| பச்சை அரிசி (சிவப்பு) | வி.கி | 148.00 | 145.20 | 138.00 | வி.கி | 170.00 | 162.00 | 150.00 |
| அவரை | 360.00 | 405.00 | 410.00 | 360.00 | 410.00 | 457.50 | 460.00 | 410.00 |
| கோவா | 250.00 | 165.00 | 148.00 | 130.00 | 296.00 | 222.50 | 200.00 | 180.00 |
| கரட் | 225.00 | 320.00 | 366.00 | 406.00 | 270.00 | 370.00 | 418.00 | 456.00 |
| தக்காளி | 180.00 | 185.00 | 444.00 | 356.00 | 220.00 | 225.00 | 512.00 | 414.00 |
| பூசணிக்காய் | 216.00 | 100.00 | 122.00 | 124.00 | 236.00 | 140.00 | 162.00 | 164.00 |
| புடலங்காய் | 210.00 | 250.00 | 200.00 | 164.00 | 256.00 | 300.00 | 260.00 | 212.00 |
| கத்தரிக்காய் | 234.00 | 192.50 | 320.00 | 360.00 | 284.00 | 245.00 | 370.00 | 410.00 |
| பச்சை மிளகாய் | 380.00 | 637.50 | 660.00 | 530.00 | 430.00 | 687.50 | 710.00 | 580.00 |
| எலுமிச்சை | 250.00 | 260.00 | 210.00 | 260.00 | 300.00 | 310.00 | 260.00 | 310.00 |
| சின்ன வெங்காயம் (உள்ளூர்) | 346.20 | 380.00 | 454.60 | 485.00 | 450.00 | வி.கி. | 458.00 | 495.00 |
| பெரிய வெங்காயம் (இறக்கும.. | 184.20 | 97.75 | 124.40 | 109.60 | 212.00 | 132.50 | 152.00 | 136.00 |
| உருளைக்கிழங்கு (உள்ளூர்) | 428.00 | 328.50 | 343.20 | 324.60 | 460.00 | 390.00 | 374.00 | 350.00 |
| செத்தல் மிளகாய் (இறக்குமதி) | 1,730.80 | 1004 | 1,055.00 | 1,100.00 | 2,000.00 | 1,180.00 | 1,136.00 | 1,220.00 |
| சிவப்பு பருப்பு | 501.60 | 259.50 | 253.40 | 265.00 | 550.00 | 285.00 | 274.00 | 280.00 |
| வெள்ளை முட்டை (ஒன்று) | 38.00 | வி.கி. | வி.கி. | வி.கி. | 39.00 | வி.கி. | வி.கி. | வி.கி. |
| தேங்காய் (ஒன்று) | 75.00 | 85.00 | 80.00 | 80.00 | 80.00 | 120.00 | 100.00 | 100.00 |

### 1.2.2 மறண்டகாமுல்லைச் சந்தை

| உணவு வகை (ரூ./கி.கிறாம்) | அரிசியின் சராசரி மொத்த விற்பனை விலை | | | |
|---|---|---|---|---|
| | ஆண்டிற்கு முன் | மாதத்திற்கு முன் | வாரத்திற்கு முன் | இவ்வாரம் |
| சம்பா | 230.00 | 195.00 | 198.00 | 198.00 |
| வெள்ளைப் பச்சை | வி.கி | 158.00 | 161.00 | 162.00 |
| சிவப்புப் பச்சை | வி.கி | 149.00 | 141.20 | 143.80 |
| நாட்டரிசி | 220.00 | 176.50 | 175.00 | 176.20 |

வி.கி. - விபரம் கிடைக்கவில்லை

(அ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் திருத்தப்பட்டது.

### 1.2.3 தம்புள்ளைச் சந்தை

| உணவு வகை (ரூ./கி.கிறாம்) | சராசரி மொத்த விற்பனை விலைகள் | |
|---|---|---|
| | வாரத்திற்கு முன் | இவ்வாரம் |
| சம்பா | 230.00 | 230.00 |
| சிவப்புப் பச்சை | 140.00 | 140.00 |
| அவரை | 366.00 | 328.00 |
| கோவா | 123.00 | 141.00 |
| கரட் | 305.00 | 399.00 |
| தக்காளி | 403.00 | 277.00 |
| பூசணிக்காய் | 104.80 | 88.00 |
| புடலங்காய் | 113.00 | 90.00 |
| கத்தரிக்காய் | 270.00 | 286.00 |
| சாம்பல் வாழைக்காய் | 164.00 | 158.00 |
| சின்ன வெங்காயம் (உள்ளூர்) | 384.00 | 387.00 |
| சின்ன வெங்காயம் (இறக்குமதி) | 410.00 | வி.கி. |
| பெரிய வெங்காயம் (இறக்குமதி) | 113.60 | 107.60 |
| உருளைக்கிழங்கு (உள்ளூர்) | 316.60 | 321.00 |
| உருளைக்கிழங்கு (இறக்குமதி) | 221.60 | 189.60 |
| செத்தல் மிளகாய் (இறக்குமதி) | 1,029.00 | 1,067.00 |
| தேங்காய் (ஒன்று) | 68.00 | 68.00 |

### 1.2.4 நாரஹன்பிட்டி பொருளாதார நிலையம்

| உணவு வகை (ரூ./கி.கிறாம்) | சராசரி சில்லறை விலைகள் | |
|---|---|---|
| | வாரத்திற்கு முன் | இவ்வாரம் |
| சம்பா | 226.60 | 230.00 |
| சிவப்புப் பச்சை | 148.00 | 150.00 |
| அவரை | 490.00 | 500.00 |
| கோவா | 320.00 | 292.00 |
| கரட் | 440.00 | 492.00 |
| தக்காளி | 592.00 | 476.00 |
| பூசணிக்காய் | 160.00 | 168.00 |
| புடலங்காய் | 432.00 | 372.00 |
| கத்தரிக்காய் | 408.00 | 492.00 |
| பச்சை மிளகாய் | 1000 | 840.00 |
| சின்ன வெங்காயம் (உள்ளூர்) | 560.00 | 560.00 |
| பெரிய வெங்காயம் (இறக்குமதி) | 148.00 | 140.00 |
| உருளைக்கிழங்கு (உள்ளூர்) | 404.00 | 440.00 |
| உருளைக்கிழங்கு (இறக்குமதி) | 220.00 | 220.00 |
| செத்தல் மிளகாய் (இறக்குமதி) | 1,260.00 | 1,260.00 |
| சிவப்பு பருப்பு | 280.00 | 280.00 |
| வெள்ளைச் சீனி | 230.00 | 240.00 |
| வெள்ளை முட்டை (ஒன்று) | வி.கி. | வி.கி. |
| தேங்காய் (ஒன்று) | 106.00 | 110.00 |
















### 1.2.5 மீன் சந்தைகள்

| | பேலியாகொட | | நீர்கொழும்பு | | | | நாரகன்பிட்டிய | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ச.மொ. விற்பனை விலைகள் | | ச.மொ. விற்பனை விலைகள் | | சராசரி சில்லறை விலைகள் | | சராசரி சில்லறை விலைகள் | |
| | வாரத்திற்கு முன் | இவ்வாரம் | வாரத்திற்கு முன் | இவ்வாரம் | வாரத்திற்கு முன் | இவ்வாரம் | வாரத்திற்கு முன் | இவ்வாரம் |
| சூரை | 1,400.00 | 1,400.00 | 1,452.00 | 1,430.00 | 1,990.00 | 1,950.00 | 2,484.00 | 2,480.00 |
| பாளயா | 970.00 | 812.50 | வி.கி. | வி.கி. | வி.கி. | வி.கி. | 1,200.00 | 1,008.00 |
| சாளையா | 488.00 | 564.00 | 436.00 | 530.00 | 582.00 | 664.00 | 588.00 | 680.00 |
| கீரி மீன் | 1,100.00 | 800.00 | 1,030.00 | 980.00 | 1,196.00 | 1,126.67 | வி.கி. | 1,196.67 |

வி.கி. - விபரம் கிடைக்கவில்லை

## 1.3 நிலையான (2015) விலைகளில் கைத்தொழில் மூலகங்களின்படி மொ.உ.உற்பத்தி - வளர்ச்சி வீதங்கள்

| விடயம் | ஆண்டு ரீதியாக | | காலாண்டு ரீதியாக | |
|---|---|---|---|---|
| | 2021 (அ)(ஆ) | 2022 (ஆ) | 2022 (அ)(ஆ) 1ஆம் காலாண்டு | 2023 (ஆ) 2ஆம் காலாண்டு |
| வேளாண்மை | 0.9 | (4.6) | (4.4) | 0.8 |
| கைத்தொழில் | 5.7 | (16.0) | (3.7) | (23.4) |
| பணிகள் | 3.5 | (2.0) | 1.8 | (5.0) |
| உற்பத்திகள் மீது உதவுதொகைளை கழித்த வரிகள் | (3.6) | (27.1) | (1.7) | (28.7) |
| மொ.உ.உற்பத்தி | 3.5 | (7.8) | (0.5) | (11.5) |

) தற்காலிகமானது
) திருத்தப்பட்டது




மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

## 1.4 வேளாண்மை உற்பத்தி

| விடயம் | மே | | % மாற்றம் |
|---|---|---|---|
| | 2022 (அ) | 2023 (அ) | |
| தேயிலை (மில். கிலோ கிறாம்) | 26.4 | 26.5 | 0.3 |
| இறப்பர் (மில். கிலோ கிறாம்) | 5.9 | 6.0 | 1.4 |
| தெங்கு (மில். கிலோ கிறாம்) | 280.0 | 269.4 | (3.8) |

(அ) தற்காலிகமானது




மூலங்கள்: இலங்கை தேயிலைச் சபை
இறப்பர் அபிவிருத்தி திணைக்களம்
தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை

## 1.5 கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (2015 = 100) (அ)

| விடயம் | மே | | % மாற்றம் |
|---|---|---|---|
| | 2022 (ஆ) | 2023 (இ) | |
| கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் | 90.8 | 88.0 | (3.1) |
| உணவு உற்பத்திகள் | 89.8 | 91.1 | 1.5 |
| அணியும் ஆடைகள் | 109.6 | 88.8 | (19.0) |
| ஏனைய உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகள் | 99.4 | 90.1 | (9.3) |
| நிலக்கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் | 1.5 | 101.9 | 6,590.0 |
| இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் | 107.2 | 71.9 | (32.9) |
| இரசாயன மற்றும் இரசாயன உற்பத்திகள் | 116.0 | 70.9 | (38.9) |
| குடிவகைகள் | 127.6 | 115.0 | (9.9) |

(அ) பிரதான 7 துணைப் பிரிவுகள்
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானவை




மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

## 1.6 கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்

| கொமுசு தயாரிப்பு | 2022 | | 2023 | |
|---|---|---|---|---|
| | மே | யூன் | மே | யூன் |
| சுட்டெண் | 50.3 | 44.1 | 46.2 | 47.3 |

| கொமுசு பணிகள் | 2022 | | 2023 | |
|---|---|---|---|---|
| | மே | யூன் | மே | யூன் |
| சுட்டெண் | 42.4 | 40.3 | 53.5 | 56.7 |






## 1.7 தொழில்நிலை (அ)

| விடயம் | 2022 | 2022 கா4 | 2023 கா1 |
|---|---|---|---|
| தொழிற்படை பங்கேற்பு வீதம் | 49.8 | 48.9 | 49.9 |
| தொழிலின்மை வீதம் | 4.7 | 4.8 | 4.7 |

துறைவகைப்படி தொழில்புரியும் ஆட்கள் (ஆ) (மொத்த தொழில்நிலையின் % ஆக)

| | 2022 | 2023 கா3 | 2023 கா4 |
|---|---|---|---|
| வேளாண்மை | 26.5 | 26.9 | 28.2 |
| கைத்தொழில் | 26.5 | 25.9 | 24.3 |
| பணிகள் | 47.0 | 47.2 | 47.5 |




மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

## 1.8 கூலி வீதச் சுட்டெண்கள்

| விடயம் | 2022 மே | 2023 மே | % மாற்றம் |
|---|---|---|---|
| அரச துறை ஊழியர்களின் கூலி வீதச் சுட்டெண் (2016 = 100) - பெயரளவு | 133.1 | 133.1 | 0.0 |
| முறைசார தனியார் துறை ஊழியர்களின் கூலி வீதச் சுட்டெண் (2018 = 100) - பெயரளவு | 152.1 | 170.5 | 12.1 |
| வேளாண்மை | 146.0 | 170.6 | 16.8 |
| கைத்தொழில் | 155.5 | 170.4 | 9.6 |
| பணிகள் | 151.0 | 170.8 | 13.1 |




## 1.9 சராசரி மசகெண்ணெய் விலைகள்

| மாதம் | 2022 எதிர்கால விலைகள் (ஐ.அ.டொலர்/பீப்பாய்) பிரெண்ட் (அடிப்படை விலைகள்) | மே.ரெ.இ.ம. விலை (அடிப்படை விலைகள்) | இ.பெ.கூ. இன் இறக்குமதி விலைகள் (கொ.கா.க) (ஐ.அ.டொ/பீப்.) (இ) | 2023 எதிர்கால விலைகள் .. பிரெண்ட் (அடிப்படை விலைகள்) | மே.ரெ.இ.ம. விலை (அடிப்படை விலைகள்) | இ.பெ.கூ. இன் இறக்குமதி விலைகள் (கொ.கா.க) (இ) (ஐ.அ.டொ/பீப்.) |
|---|---|---|---|---|---|---|
| சனவரி | 84.96 | 82.55 | 84.09 | 84.28 | 78.60 | 97.93 (ஈ) |
| பெப்புருவரி | 94.17 | 91.74 | 76.41 | 83.52 | 76.97 | - |
| மாச்சு | 114.05 | 109.66 | - | 78.93 | 73.05 | 84.05 |
| ஏப்பிறல் | 105.56 | 101.23 | - | 83.09 | 79.10 | 90.49 (ஈ) |
| மே | 111.91 | 109.64 | 109.94 | 76.05 | 72.05 | 86.90 (ஈ) |
| யூன் | 117.29 | 113.89 | - | 74.85 | 70.13 | 90.90 |
| யூலை | 105.39 | 100.47 | - | | | |
| ஓகத்து | 98.07 | 91.79 | 114.71 | | | |
| செத்தெம்பர் | 91.03 | 84.58 | 119.71 | | | |
| ஒத்தோபர் | 93.04 | 86.60 | - | | | |
| நவெம்பர் | 90.89 | 83.96 | 98.77 | | | |
| திசெம்பர் | 81.80 | 77.06 | 97.03 | | | |

| திகதி | 2022 | | 2023 | |
|---|---|---|---|---|
| 15-7-22 | 99.39 | 95.84 | - | - |
| 16-7-22 | - | - | - | - |
| 17-7-22 | - | - | 79.29 | 74.89 |
| 18-7-22 | 100.89 | 96.89 | 78.71 | 74.43 |
| 19-7-22 | 106.16 | 102.36 | 79.73 | 75.74 |
| 20-7-22 | 107.02 | 103.60 | 79.63 | 75.27 |
| 21-7-22 | 106.24 | 102.26 | 79.98 | 75.63 |







மூலங்கள் : புளூம்பேர்க், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

## 1.10 நாளாந்த மின்வலு உருவாக்கம்

| | 17-07-2023 | 18-07-2023 | 19-07-2023 | 20-07-2023 |
|---|---|---|---|---|
| உச்சமட்டகேள்வி(மெ.வாட்) | 2,251.30 | 2,273.70 | 2,263.90 | 2,246.20 |
| மொத்த வலு (ஜி.வாட்) | 46.73 | 47.50 | 47.63 | 47.19 |
| நீர்மின்வலு | 13.20 | 13.75 | 12.91 | 12.47 |
| அனல் நிலக்கரி | 12.63 | 8.73 | 11.24 | 11.22 |
| அனல் எரிபொருள் | 14.59 | 17.86 | 15.78 | 15.89 |
| காற்றாடி | 3.54 | 4.35 | 4.93 | 4.76 |
| சூரியவலு (மொத்தமாக) | 2.31 | 2.31 | 2.33 | 2.35 |
| உயிரித்திணவு | 0.45 | 0.50 | 0.45 | 0.50 |




மூலங்கள்: இலங்கை மின்சார சபை

(அ) 15 மற்றும் அதற்கு மேற்பட்ட வேலைசெய்யும் வயதுக் குடித்தொகை
(ஆ) பன்னாட்டு நியமக் கைத்தொழில் வகைப்படுத்தல் அடிப்படையில் - மீளாய்வு 4
(இ) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விலைகள் கப்பற்சரக்கு கட்டணங்களை உள்ளடக்கியுள்ளமை, மசகெண்ணெய்யினது பல்வேறுபட்ட வகைகளின் நிறையேற்றப்பட்ட சராசரி விலைகளாக இ.பெ.கூட்டுத்தாபனத்தின் விலைகள் காணப்படுகின்றமை ஆகிய காரணங்களினால் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் இறக்குமதியின் ஒரு பகுதி கால ஒப்பந்த அடிப்படையொன்றில் காணப்படுகின்றது. மசகெண்ணெய்யானது, 2022 மாச்சு, ஏப்பிறல், யூன் மற்றும் ஒத்தோபர் மாதங்களிலும் 2023 பெப்புருவரி மற்றும் மாதங்களிலும் இறக்குமதி செய்யப்படவில்லை.
(ஈ) தற்காலிகமானது

# நாணயத் துறை

## 2.1 வட்டி வீதங்கள் (ஆண்டொன்றிற்கான சதவீதமாக)

| கொள்கை வட்டி வீதங்கள் | ஆண்டிற்கு முன் | வாரத்திற்கு முன் | இவ்வாரம் |
|---|---|---|---|
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 14.50 | 11.00 | 11.00 |
| துணைநில் கடன்வழங்கல் வீதம் | 15.50 | 12.00 | 12.00 |
| **அழைப்புப் பணச் சந்தை** | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம் | 15.50 | 11.87 | 11.77 |
| **திறைசேரி உண்டியல் விளைவுகள் (முதனிலைச் சந்தை)** | | | |
| 91 நாள் | 31.50 | 19.08 | 19.99 |
| 182 நாள் | 29.97 | 16.95 | 17.77 |
| 364 நாள் | 29.82 | 14.04 | 14.35 |
| **உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்** | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதம் | 23.53 | 18.69 | 17.76 |

சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம்




| | 2022 மே | 2023 ஏப்பிறல் | 2023 மே |
|---|---|---|---|
| சேமிப்பு வைப்புக்கள் | 0.10 - 7.00 | 0.25 - 12.00 | 0.25 - 12.00 |
| ஒரு வருட நிலையான வைப்பக்கள் | 0.25 - 24.00 | 2.80 - 30.00 | 2.80 - 30.00 |

| | 2023 யூன் | 2023 மே | 2024 யூன் |
|---|---|---|---|
| சராசரி நியையேற்றப்பட்ட வைப்பு வீதம் | 15.09 | 15.23 | 15.09 |
| சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதம் | 19.70 | 19.84 | 19.70 |

| | 2022 மே | 2023 ஏப்பிறல் | 2023 மே |
|---|---|---|---|
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதம் | 16.98 | 19.19 | 18.85 |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய நிலையான வைப்பு வீதம் | 17.19 | 19.70 | 19.19 |

| | 2022 மே | 2023 ஏப்பிறல் | 2023 மே |
|---|---|---|---|
| சராசரி நிறையேற்றப்பட்ட கடன்வழகல் வீதம் | 13.46 | 17.87 | 17.75 |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன்ழங்கல் வீதம் | 20.00 | 23.09 | 22.39 |

| தேசிய சேமிப்பு வங்கிகள் | 2022 மே | 2023 ஏப்பிறல் | 2023 மே |
|---|---|---|---|
| சேமிப்பு வைப்புக்கள் | 3.50 | 3.00 | 3.00 |
| ஒரு வருட நிலையான வைப்புகள் | 13.50 | 12.00 | 12.00 |

| திறைசேரி முறி ஏலம் | 02 ஆண்டு 09 மாதங்கள் 2023 யூலை 13 | 06 ஆண்டு 10 மாதங்கள் 2023 யூலை 13 |
|---|---|---|
| நறுக்கு வீதம் | 9.00 | 11.00 |
| நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு | 15.74 | 15.67 |

### வங்கி ரீதியான சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதம்

| | வாரத்திற்கு முன் | இவ்வாரம் | | வாரத்திற்கு முன் | இவ்வாரம் |
|---|---|---|---|---|---|
| இலங்கை வங்கி | 19.52 | 19.48 | கால்கில்ஸ் பாங்க் | 21.30 | 21.30 |
| மக்கள் வங்கி | 24.00 | 24.00 | த கொங் அன் ஷங்காய் பாங்க் | 15.54 | 15.36 |
| ஹற்றன் நஷனல் வபாங்க் | 19.12 | 18.31 | ஸ்ரான்டட் சார்டட் பாங்க் | 16.27 | 15.47 |
| கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் | 19.17 | 18.60 | சிற்றி பாங்க் | 18.00 | 17.00 |
| சம்பத் பாங்க் | 19.89 | 19.48 | டொயிஷ் பாங்க் | 15.51 | 14.97 |
| செலான் பாங்க் | 21.41 | 20.05 | ஹபீப் பாங்க் | 21.18 | 22.12 |
| யூனியன் பாங்க் ஒப் கொழும்பு | 19.04 | 20.17 | இந்தியன் பாங்க் | 21.04 | 21.04 |
| பான் ஏசியா கோப்பிரேசன் | 19.48 | 18.50 | இந்தியன் ஓவசீஸ் பாங்க் | 20.54 | 20.54 |
| நேசன்ஸ் ரஸ்ட் பாங்க் | 18.95 | 17.93 | எம்சிபி பாங்க் | 19.67 | 19.19 |
| டீஎப்சிசி பாங்க் | 20.63 | 22.80 | ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா | 21.33 | 21.09 |
| என்டீபி பாங்க் | 18.58 | 17.33 | பப்ளிக் பாங்க் | 19.17 | 19.63 |
| அமானா பாங்க் (அ) | 18.98 | 18.44 | சீன வங்கி | - | - |

(அ) வங்கியானது இவ்வாரத்தில் முதன்மை வாடிக்கையாளர்களுக்கு கடன்களை வழங்கவில்லை, இருப்பினும் அண்மைய கிடைப்பனவாகவுள்ள வீதம் வழங்கப்பட்டுள்ளது.

## 2.2 பண நிரம்பல்

| | ரூ. பில். | | | வருடாந்த மாற்றம் (%) | | |
|---|---|---|---|---|---|---|
| | மே 2022 | ஏப்பிறல் 2023 [அ] | மே 2023 [ஆ] | மே 2022 [அ][ஆ] | ஏப்பிறல் 2023 [அ] | மே 2023 [அ][ஆ] |
| ஒதுக்குப் பணம் | 1,414.9 | 1,417.1 | 1,559.1 | 36.6 | -4.4 | 10.2 |
| M1 | 1,603.9 | 1,499.4 | 1,497.0 | 28.7 | -8.3 | -6.7 |
| M2 | 10,117.5 | 10,779.4 | 10,837.9 | 12.2 | 5.8 | 7.1 |
| M2b | 11,897.0 | 12,386.6 | 12,306.5 | 18.6 | 3.7 | 3.4 |
| வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் [ஆ] | -2,082.8 | -1,039.2 [ஈ] | -837.6 | -385.6 | 52.7 | 59.8 |
| நாணய அதிகார சபைகள் | -1,546.5 | -1,190.9 | -977.4 | -543.0 | 18.6 | 36.8 |
| வர்த்தக வங்கிகள் | -536.3 | 151.7 | 139.8 | 31.1 | 120.7 | 126.1 |
| உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகள் | -559.1 | -358.4 | -337.5 | -16.3 | 49.0 | 39.6 |
| கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகள் | 22.8 | 510.1 | 477.4 | 107.7 | 1,805.6 | 1,993.8 |
| வங்கித்தொழில் முறைமையின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் [ஆ] | 13,979.8 | 13,425.8 | 13,144.1 | 33.6 | -5.0 | -6.0 |
| அரசிற்கான தேறிய கொடுகடன் | 6,522.5 | 8,091.1 | 8,110.9 | 30.1 | 23.2 | 24.4 |
| நாணய அதிகார சபைகள் | 2,904.8 | 3,214.3 | 3,123.7 | 175.4 | 11.2 | 7.5 |
| வர்த்தக வங்கிகள் | 3,617.7 | 4,876.9 | 4,987.2 | -8.6 | 32.5 | 37.9 |
| உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகள் | 3,112.7 | 4,561.1 | 4,696.7 | -11.6 | 43.5 | 50.9 |
| கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகள் | 505.0 | 315.8 | 290.4 | 14.9 | -36.9 | -42.5 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடன் | 1,750.1 | 1,151.8 | 1,088.6 | 57.3 | -33.2 | -37.8 |
| உள்நாட்டு வங்கித்தொழில் பரிவுகள் | 1,528.1 | 1,098.8 | 1,040.2 | 134.9 | -24.6 | -31.9 |
| கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகள் | 222.1 | 53.0 | 48.3 | -51.9 | -80.2 | -78.2 |
| தனியார் துறைக்கான கொடுகடன் | 7,754.8 | 7,087.7 | 6,999.0 | 19.3 | -8.6 | -9.8 |
| உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகள் | 6,960.2 | 6,537.4 | 6,506.8 | 15.4 | -6.0 | -6.5 |
| உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகள் | 794.6 | 550.3 | 492.2 | 68.2 | -31.0 | -38.1 |
| ஏனைய விடயங்கள் (தேறிய) | -2,047.7 | -2,904.8 | -3,054.4 | 5.5 | -52.0 | -49.2 |










## 2.3 ஒதுக்குப் பணத்தின் வாராந்த மாற்றம்

| | 2023 யூலை 13 | 2023 யூலை 20 | மாற்றம் |
|---|---|---|---|
| துக்குப் பணம் (ரூ. மில்.) | 1,609,864.25 | 1,645,971.68 | 36,107.43 |




## 2.4 பணச் சந்தை நடவடிக்கை (ஓரிரவு)

| அழைப்புப் பணச் சந்தை | 2023. யூலை 17 | 2023 யூலை 18 | 2023 யூலை 19 | 2023 யூலை 20 | 2023 யூலை 21 |
|---|---|---|---|---|---|
| சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம் | 11.86 | 11.95 | 11.98 | 11.57 | 11.5 |
| மொத்த அளவு (ரூ. பில்) | 1.40 | 4.50 | 7.34 | 7.72 | 15.8 |

| மீள்கொள்வனவுச் சந்தை | 2023 யூலை 17 | 2023 யூலை 18 | 2023 யூலை 19 | 2023 யூலை 20 | 2023 யூலை 21 |
|---|---|---|---|---|---|
| சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம் | 12.00 | 12.00 | 12.00 | 12.00 | 11.96 |
| மொத்த அளவு (ரூ. பில்) | 8.50 | 5.50 | 3.50 | 3.00 | 11.80 |

## .5 இலங்கை மத்திய வங்கியின் பிணையச் சொத்துப்பட்டியல்

| | 2023 யூலை 17 | 2023 யூலை 18 | 2023 யூலை 19 | 2023 யூலை 20 | 2023 யூலை 21 |
|---|---|---|---|---|---|
| இ.ம.வங்கி தி.உண்டியல் அல்லது முறி உடமைகள் - முகப்பபுப் பெறுமதி (ரூ. பில்.) | 2,644.11 | 2,644.11 | 2,644.11 | 2,644.11 | 2,677.28 |
| இ.ம.வங்கி தி.உண்டியல் அல்லது முறி உடமைகள் - ஏட்டுப் பெறுமதி (ரூ. பில்.) | 2,580.28 | 2,581.43 | 2,582.25 | 2,584.06 | 2,611.00 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) M2b உடன் தொடர்புபட்டது
(ஈ) 2023 சனவரி 30 அன்று இடம்பெற்ற அதன் கூட்டத்தில் அமைச்சரவை ஒப்புதலுடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வெளிநின்ற வெளிநாட்டு நாணய உத்தரவாதமளிக்கப்பட்ட படுகடனானது 2022 திசெம்பரிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் மத்திய அரசு படுகடனுக்குள் உள்ளீர்க்கப்பட்டது. இதற்கமைய, இச்சீராக்கமானது இரண்டு கட்டத்தில் முதலாவது 2023 ஏப்பிறலிலும் அதனைத்தொடர்ந்து 2023 திசெம்பரிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. இருப்பினும், குறிப்பிட்ட அரசிற்குச் சொந்தமான வர்த்தக வங்கியின் நிலவையில் பிரதிபலிக்கப்பட்டது. இது, அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசிற்குச் சொந்தமான

## 2.6 திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்

| விடயம் | 2023 யூலை 17 | | 2023 யூலை 18 | | 2023 யூலை 19 | | 2023 யூலை 20 | | 2023 யூலை 21 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **குறுங்கால ஏலம்** | | | | | | | | | | |
| முன்வைக்கப்பட்ட மீள்கொள்வனவுத் தொகை (ரூ. பில்) | | | | | | | | | | |
| முன்வைக்கப்பட்ட நேர்மாற்று மீள்கொள்வனவுத் தொகை (ரூ. பில்) | 120.00 | 25.00 | 100.00 | 25.00 | 110.00 | 25.00 | 110.00 | 20.00 | 100.00 | 20.00 |
| காலம் (நாட்களின் எண்ணிக்கை) | 1 | 7 | 1 | 7 | 1 | 7 | 1 | 7 | 3 | 6 |
| கிடைக்கப்பெற்ற குறிப்பீடுகள் (ரூ. பில்) | 78.86 | 84.50 | 109.80 | 54.50 | 101.85 | 19.50 | 99.85 | 25.00 | 73.10 | 13.00 |
| ஏற்றுகொள்ளப்பட்ட தொகை (ரூ. பில்) | 78.86 | 25.00 | 100.00 | 25.00 | 101.85 | 19.50 | 99.85 | 20.00 | 73.10 | 13.00 |
| ஏற்றுகொள்ளப்பட்ட மிகக்குறைந்த வீதம் (ஆண்டுக்கான % ஆக) | 11.50 | 12.00 | 11.40 | 12.00 | 11.40 | 12.00 | 11.40 | 12.00 | 11.40 | 12.00 |
| ஏற்றுகொள்ளப்பட்ட மிகக்கூடிய வீதம் (ஆண்டுக்கான % ஆக) | 12.00 | 12.00 | 12.00 | 12.00 | 12.00 | 12.00 | 12.00 | 12.00 | 12.00 | 12.00 |
| நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம்(ஆண்டுக்கான % ஆக) | 11.80 | 12.00 | 11.80 | 12.00 | 11.74 | 12.00 | 11.68 | 12.00 | 11.60 | 12.00 |
| **உடனடி ஏலங்கள்** | | | | | | | | | | |
| முன்வைக்கப்பட்ட உடனடி விற்பனைத் தொகை (ரூ. பில்) | | | | | | | | | | |
| முன்வைக்கப்பட்ட உடனடிக் கொள்வனவுத் தொகை (ரூ. பில்) | | | | | | | | | | |
| தீர்ப்பனவுத் திகதி | | | | | | | | | | |
| முதிர்ச்சித் திகதி | | | | | | | | | | |
| காலம் (நாட்களின் எண்ணிக்கை) | | | | | | | | | | |
| கிடைக்கப்பெற்ற குறிப்பீடுகள் (ரூ. பில்) | | | | | | | | | | |
| ஏற்றுகொள்ளப்பட்ட தொகை (ரூ. பில்) | | | | | | | | | | |
| ஏற்றுகொள்ளப்பட்ட மிகக்குறைந்த வீதம் (ஆண்டுக்கான % ஆக) | | | | | | | | | | |
| ஏற்றுகொள்ளப்பட்ட மிகக்கூடிய வீதம் (ஆண்டுக்கான % ஆக) | | | | | | | | | | |
| நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம்(ஆண்டுக்கான % ஆக) | | | | | | | | | | |
| **நீண்ட கால ஏலங்கள்** | | | | | | | | | | |
| முன்வைக்கப்பட்ட மீள்கொள்வனவுத் தொகை (ரூ. பில்) | | | | | | | | | | |
| முன்வைக்கப்பட்ட நேர்மாற்று மீள்கொள்வனவுத் தொகை (ரூ. பில்) | | | | | | | | | | |
| தீர்ப்பனவுத் திகதி | | | | | | | | | | |
| முதிர்ச்சித் திகதி | | | | | | | | | | |
| காலம் (நாட்களின் எண்ணிக்கை) | | | | | | | | | | |
| கிடைக்கப்பெற்ற குறிப்பீடுகள் (ரூ. பில்) | | | | | | | | | | |
| ஏற்றுகொள்ளப்பட்ட தொகை (ரூ. பில்) | | | | | | | | | | |
| ஏற்றுகொள்ளப்பட்ட மிகக்குறைந்த வீதம் (ஆண்டுக்கான % ஆக) | | | | | | | | | | |
| ஏற்றுகொள்ளப்பட்ட மிகக்கூடிய வீதம் (ஆண்டுக்கான % ஆக) | | | | | | | | | | |
| நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம்(ஆண்டுக்கான % ஆக) | | | | | | | | | | |
| **திரவத்தன்மை ஆதரவு வசதி ஏலம்** | | | | | | | | | | |
| முன்வைக்கப்பட்ட நேர்மாற்று மீள்கொள்வனவுத் தொகை (ரூ. பில்) | | | | | | | | | | |
| தீர்ப்பனவுத் திகதி | | | | | | | | | | |
| முதிர்ச்சித் திகதி | | | | | | | | | | |
| காலம் (நாட்களின் எண்ணிக்கை) | | | | | | | | | | |
| கிடைக்கப்பெற்ற குறிப்பீடுகள் (ரூ. பில்) | | | | | | | | | | |
| ஏற்றுகொள்ளப்பட்ட தொகை (ரூ. பில்) | | | | | | | | | | |
| ஏற்றுகொள்ளப்பட்ட மிகக்குறைந்த வீதம் (ஆண்டுக்கான % ஆக) | | | | | | | | | | |
| ஏற்றுகொள்ளப்பட்ட மிகக்கூடிய வீதம் (ஆண்டுக்கான % ஆக) | | | | | | | | | | |
| நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம்(ஆண்டுக்கான % ஆக) | | | | | | | | | | |
| **துணைநில் வசதி** | | | | | | | | | | |
| துணைநில் வைப்பு வசதி ( ரூ. பில்) | 12.700 | | 15.700 | | 34.950 | | 28.750 | | 193.360 | |
| துணைநில் கடன்வழங்கல் வசதி ( ரூ. பில்) | 98.050 | | 105.340 | | 88.270 | | 92.380 | | 102.590 | |
| **மொத்த ஓரிரவுச் சந்தைத் திரவத்தன்மை (ரூ. பில்)** | **(189.200)** | | **(214.640)** | | **(174.680)** | | **(183.480)** | | **4.670** | |
| **மொத்த வெளிநின்ற சந்தைத் திரவத்தன்மை (ரூ. பில்)[அ]** | **(359.300)** | | **(379.740)** | | **(334.280)** | | **(337.980)** | | **(137.830)** | |

(அ) மொத்த வெளிநின்ற சந்தைத் திரவத்தன்மை மத்திய வங்கியின் மீள்கொள்வனவு/ நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களில் வெளிநின்ற தொகைகளுக்காகச் சந்தைப் பங்கேற்பாளர்களுடன் சீராக்கப்பட்ட ஓரிரவு திரவத்தன்மையைக் குறிக்கின்றது.

## 2.7 கடனட்டைகள் மற்றும் வர்த்தக பத்திர வழங்கல்கள்

### 2.7.1 கடனட்டைகள் (அ)

| | 2022 திசெம்பர் | 2023 ஏப்பிறல் | 2023 மே (ஆ) |
|---|---|---|---|
| செயற்படும் அட்டைகளின் மொத்த எண்ணிக்கை | 1,952,991 | 1,913,000 | 1,917,085 |
| உள்நாடு (உள்நாட்டில் மட்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டது) | 13,028 | 10,913 | 10,768 |
| உலகளாவிய (உலகளாவிய ரீதியில் மட்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டது) | 1,939,963 | 1,902,087 | 1,906,317 |
| வெளிநின்ற நிலுவை (ரூ. மில்) - கடனட்டைகள் | 143,098 | 145,197 | 151,373 |
| உள்நாடு (உள்நாட்டில் மட்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டது) | 37,328 | 34,822 | 35,838 |
| உலகளாவிய (உலகளாவிய ரீதியில் மட்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டது) | 105,770 | 110,375 | 115,534 |

### 2.7.2 வர்த்தக பத்திர வழங்கல்கள் (இ)

